**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.932/2015

வா.சா.1 நவீனா

**5-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

5 ம் பிரதிவாதி என்னுடைய சகோதர், 2 ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனரான 2 ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவாச் சொத்துக்களின் பேரில் பல மோசடி கிரைய ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணங்களில் நானோ, 5 ம் பிரதிவாதியோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பரிவர்த்தனை மூலமாக நானும், 5 ம் பிரதிவாதியும் எவ்வித பிரதி பிரயோஜனமும் பெறவில்லை என்றால் சரிதான். பிறப்பு உரிமையின் அடிப்படையில் எனக்கும், 5 ம் பிரதிவாதிக்கும் தாவாச் சொத்தில் தலா 12 ல் ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களின் பேரில் 2 ம் பிரதிவாதி இதர பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஆவணங்கள் என்னையும், 5 ம் பிரதிவாதியையும் கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களை பொருத்து 5 ம் பிரதிவாதிக்கு 12 -ல் ஒரு பாகம் ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

**6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**8,9, 14, 16 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**